முழுப் பதிப்புரிமையுடையது.

# இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்

## மட்டம் I பரீட்சை – 2021 யூலை

## (104) வணிகச் சூழல்

(Business Environment)

2021-10-31
பிற்பகல்
[02.00 – 5.00]

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***காலம் :*** *03 மணித்தியாலங்கள்*

(2) ***சகல வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.***

(3) *வழங்கப்பட்டுள்ள* ***விடைப் புத்தகத்தில்*** *நீங்கள் விண்ணப்பித்த* ***மொழி மூலத்திலேயே விடைகள்*** *எழுதப்படல் வேண்டும்.*

(4) *நீங்கள் ஏதேனும் எடுகோள்களை மேற்கொண்டிருப்பின் அவற்றைத் தெளிவாகக் குறிப்பிடவும்.*

(5) ***செயல் வினைச் சொற்களின் செவ்வை நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப் பட்டுள்ளது. OTQs தவிர்ந்த ஒவ்வொரு வினாவும் ஒரு* ***செயல் வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் செயல் வினைச் சொல் செவ்வை நிரலில் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(6) *100 புள்ளிகள்.*

பக்கங்கள் : 07
வினாக்கள் : 06

---

## <u>பகுதி A</u>

### நோக்கச் சோதனை வினாக்கள் (OTQs)

(மொத்தம் 40 புள்ளிகள்)

## வினா 01

*இல. **1.1** தொடக்கம் **1.10** வரையான வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க. தெரிவு செய்யப்பட்ட விடையின் இலக்கத்தை அதற்குரிய வினா இலக்கத்துடன் உமது விடைப் புத்தகத்தில் எழுதுக.*

**1.1** பின்வருவனவற்றுள் விருப்பம் (want) ஒன்றிற்கான உதாரணமாக அமைவது எது?

(1) உணவு (2) தொழில் பாதுகாப்பு (3) உறையுள் (4) ஆடை

**1.2** பின்வருவனவற்றுள் கூட்டு முயற்சி (Joint Venture) ஒன்றின் அம்சமாக (feature) **அமையாதது** எது?

(1) பதிவு செய்வது கட்டாயமானது.

(2) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தரப்பினரின் பங்குபற்றல்.

(3) இது குறுகிய கால நோக்கமொன்றிற்காக உருவாக்கப்படுகிறது.

(4) தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு காணப்படாது.

**1.3** தனியுடமை வியாபாரமொன்றுடன் ஒப்பிடும்போது பங்குடமை வியாபாரமொன்றின் விசேட அனுகூலமாக அமைவது :

(1) கட்டாயக் கணக்கீடு. (2) விரைவான தீர்மானமெடுத்தல்.

(3) வரையறையற்ற பொறுப்பு (4) இடர் பகிர்வு.

**1.4** பின்வருவனவற்றுள் நேரடி விநியோக வழிமுறை ஒன்றாக அமைவது எது?

(1) உற்பத்தியாளர் → நுகர்வோர்.

(2) உற்பத்தியாளர் → சில்லறை விற்பனையாளர் →நுகர்வோர்.

(3) உற்பத்தியாளர்→ முகவர் → நுகர்வோர்.

(4) உற்பத்தியாளர் → மொத்த விற்பனையாளர் → சில்லறை விற்பனையாளர் → நுகர்வோர்.

**1.5** பின்வருவனவற்றுள் காசோலையொன்றுக்கு (பணம் வழங்க) மறுக்கப்படுவதற்கான காரணமாக அமைவது எது?

(1) கணக்கில் காசு இல்லாதபோது.

(2) கணக்கு மூடப்பட்டிருக்கும்போது.

(3) காசோலை வரைபவர் வங்கிக் கணக்கிலிருந்து கொடுப்பனவு செய்வதை நிறுத்தியுள்ளபோது

(4) மேலுள்ள அனைத்தும்.

**1.6** நபர் ஒருவரால் காப்புறுதி செய்ய முடியாத விடயத்திற்கான ஓர் உதாரணமாக அமைவது :

(1) நபர் ஒருவரின் ஆயுள்.

(2) எதிர்காலத்தில் வியாபாரத்தில் ஏற்படக்கூடிய கணக்கீட்டு நட்டங்கள்.

(3) இடைவழியில் உள்ள காசு.

(4) விபத்துகளிலிருந்து ஏற்படக்கூடிய சாத்தியமான இடர்.

**1.7** பின்வருவனவற்றுள் சேவையொன்றின் ஒரு பண்பாகக் கருதப்படுவது எது?

(1) தொட்டறியக்கூடியது.

(2) சேமிக்கக்கூடியது..

(3) உற்பத்தி செய்ய அதிக உழைப்பு (labour) தேவைப்படுகிறது.

(4) ஓரினத்தன்மையானது.

**1.8** பின்வருவனவற்றுள் இலங்கை மத்திய வங்கியினால் மேற்பார்வை **செய்யப்படாத** நிறுவனம் எது?

(1) ஊழியர் சேமலாப நிதியம். (2) உரிமம் பெற்ற வர்த்தக வங்கி

(3) கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையம் (4) குத்தகைக் கம்பனிகள்.

**1.9** பிற்தேதியிடப்பட்ட (postdated) காசோலை என்பது :

(1) எதிர்காலத் திகதியிடப்பட்டு வழங்கப்படும் ஒரு காசோலை ஆகும்.

(2) கடந்தகாலத் திகதியிடப்பட்டு வழங்கப்படும் ஒரு காசோலை ஆகும்.

(3) செல்லுபடிக் காலம் காலாவதியான ஒரு காசோலை ஆகும்.

(4) செல்லுபடிக் காலம் என்பதே இல்லாத ஒரு காசோலை ஆகும்.

**1.10** பின்வருவனவற்றுள் சமூக தொழில் முயற்சியாண்மையை சரியாக விபரிப்பது எது?

(1) சமூக முயற்சியாண்மை என்பது வணிக நிறுவனங்களின் ஊழியர்களால் உருவாக்கப்படும் ஆக்கத்திறன் (creativity) ஆகும்.

(2) சமூக முயற்சியாண்மை என்பது புத்தாக்கங்கள் ஊடாக சமூகத்திற்கு சேவை செய்வதில் ஈடுபடுவதாகும்.

(3) சமூக முயற்சியாண்மை என்பது சூழல் பிரச்சினைகள் மீதான விழிப்புணர்வை அதிகரிப்பதில் கவனம் செலுத்துகின்ற ஒரு முயற்சியாண்மை நடவடிக்கை ஆகும்.

(4) சமூக முயற்சியாண்மை என்பது உலகத்துடன் பொருள்களை வியாபாரம் செய்வதில் ஈடுபடுவதாகும்.

*இல.* **1.11** *தொடக்கம்* **1.15** *வரையான பின்வரும் ஒவ்வொரு கூற்றும்* ***சரியானதா*** *அல்லது* ***தவறானதா*** *என்பதைக் குறிப்பிடுக. தெரிவுசெய்யப்பட்ட விடையை (சரியானது / தவறானது) உமது விடைப்புத்தகத்தில் வினா இலக்கத்தைக் குறிப்பிட்டு அதன் எதிரே எழுதுக.*

**1.11** ஒரு முறைசார் அமைப்பை, தனி நபர்களின் சமூகத் தொழிற்பாட்டின் விளைவாக உருவாக்கப்படும் மக்கள் குழுவொன்றாக வரையறுக்கலாம்.

**1.12** அமைப்பக விதிகள் (Articles of Association) என்பது ஒரு கம்பனியின் செயற்பாடுகளுக்கான ஒழுங்குவிதிகளைக் குறித்துரைக்கின்ற பிரதான ஆவணமாகும்.

**1.13** காசோலையொன்று குறுக்குக் கோடிடப்படின், அக்காசோலையைப் பெற்றுக்கொள்பவரால் அதனை வங்கியின் கருமபீடத்தில் சமர்ப்பித்து நேரடியாகவே காசைப் பெற்றுக்கொள்ள முடியும்.

**1.14** ஒரு தொழில்முயற்சியாளரால் இடர்களைக் சமாளிக்க முடியும்.

**1.15** அண்மைப் பணம் (near money) என்பது 100% திரவத்தன்மை நாணயங்களைக் கொண்ட பணமாகும்.

*இல.* **1.16** *தொடக்கம்* **1.20** *வரையான வினாக்களுக்கான விடைகளை, உமது விடைப்புத்தகத்தில் வினாவின் இலக்கத்தைக் குறிப்பிட்டு அதற்கு எதிரே எழுதுக.*

**1.16** 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்படக்கூடிய வெவ்வேறு வகையான இரண்டு (02) கம்பனிகளைக் குறிப்பிடுக.

**1.17** பணத்தின் தொழிற்பாடுகளின் கீழ் வருகின்ற "பரிமாற்ற ஊடகம் (medium of exchange)" என்பதால் கருதப்படுவது யாதென சுருக்கமாக விபரிக்குக.

**1.18** காசோலையொன்றில் பிற்குறிப்பிடுதல் (endorsement) என்றால் என்ன என்பதைச் சுருக்கமாக விபரிக்குக.

**1.19** பெண் தொழில் முயற்சியாளர்கள் எதிர்நோக்கும் இரண்டு (02) சவால்களைப் பட்டியலிடுக.

**1.20** இலங்கை மத்திய வங்கியின் இரண்டு (02) பிரதான நோக்கங்களைக் குறிப்பிடுக.

(02 புள்ளிகள் வீதம், மொத்தம் 40 புள்ளிகள்)

*பகுதி A முடிவு*

## பகுதி B

(மொத்தம் 40 புள்ளிகள்)

### வினா 02

**COCO** என்பது 2003 இல் கூட்டிணைக்கப்பட்ட ஒரு வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனி ஆகும். **COCO** ஐரோப்பிய சந்தைக்கு கொப்பராத் தேங்காய்களை (உலர்ந்த தேங்காய்கள்) ஏற்றுமதி செய்கிறது. தற்போது, **COCO** இலங்கையில் நான்கு இடங்களில் தொழிற்சாலைகளைக் கொண்டிருப்பதுடன் அதில் 200 பேர் வேலை செய்கின்றனர். **COCO** இன் தலைமை அலுவலகம் கொழும்பில் அமைந்துள்ளது. தலைமை அலுவலகம் மற்றும் தொழிற்சாலைகள் ஆகியவற்றின் அனைத்துத் செயற்பாடுகளும் நிறுவன வளத் திட்டமிடல் (ERP) முறைமையொன்றின் ஊடாக இணைக்கப்பட்டுள்ளன.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(a) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றின் நான்கு (04) அம்சங்களைக் (features) **குறிப்பிடுக.**
(04 புள்ளிகள்)

(b) **COCO,** வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியொன்றாக கூட்டிணைக்கப்படுவதன் அனுகூலங்கள் மூன்றைக் (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) ஏற்றுமதி நோக்கம் கொண்ட ஒரு கம்பனி என்ற வகையில் **COCO** இல் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பங்களைப் (ICT) பயன்படுத்துவதன் அனுகூலங்கள் மூன்றைக் (03) **குறிப்பிடுக.**
(03 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 03

**SafeGlove** என்பது கையுறைகள் தயாரிக்கும் ஒரு கம்பனியாகும். அதன் உற்பத்தித் தொழிற்சாலைகள் கட்டுநாயக்கா சுதந்திர வர்த்தக வலயத்தில் அமைந்துள்ளன. **SafeGlove** கம்பனியின் ஏற்பாட்டியல் (logistics) முகாமையாளரான **ஜெனி, SafeGlove** இன் ஏற்றுமதிச் செயன்முறைப்படுத்தலுக்குப் பொறுப்பாக இருக்கிறார். ஏதாவது கடல்சார் பேரழிவுகள், திருட்டுகள் அல்லது தீ அபாயங்களிலிருந்து **SafeGlove** இன் ஆதனங்களைப் பாதுகாப்பது **ஜெனி** இன் பணிப் பொறுப்புகளில் ஒன்றாகும். இந்த நோக்கத்திற்காக, தொழிற்சாலைகள், கப்பல் போக்குவரத்து நிறுவனங்கள் மற்றும் காப்புறுதி முகவர்களுடன் தொடர்ச்சியான தொடர்பாடல்களையும் ஒருங்கிணைப்பையும் **ஜெனி** மேற்கொள்ள வேண்டியிருக்கிறது.

***நீங்கள் செய்ய வேண்டியவை :***

(a) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நாட்டதாரர்களுடன் (stakeholders) தொடர்பாடலை மேற்கொள்ளும் போது, **ஜெனி** எதிர்நோக்கக்கூடிய மூன்று (03) தடைகளைப் (barriers) **பட்டியலிடுக.** (03 புள்ளிகள்)

(b) **SafeGlove** இற்கான மூன்று (03) காப்புறுதி நன்மைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(c) ஏதாவது இரண்டு (02) காப்புறுதிக் கோட்பாடுகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)
(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 04

**டயஸ்** என்பவர் இலங்கை வர்த்தக சம்மேளனத்தின் ஒரு பணிப்பாளர் ஆவார். அவர் விவசாயத் திணைக்களத்தினால் நடத்தப்படுகின்ற வேலைப்பட்டறை (workshop) ஒன்றில் பிரதான உரையொன்றை நிகழ்த்துவதற்காக அழைக்கப்பட்டுள்ளார். இந்த வேலைப்பட்டறைக்கு ஏறத்தாழ 100 சிறிய அளவிலான மசாலாப்பொருள் செடிகளை வளர்ப்பவர்கள் அழைக்கப்பட்டுள்ளனர். **டயஸ்,** இலங்கையில் காணப்படும் ஏற்றுமதிக்கான சாத்தியத்தன்மை, சர்வதேச வர்த்தக நடைமுறைகள் மற்றும் வணிகங்களில் காணப்படுகின்ற தற்போதைய போக்குகள் என்பன பற்றி இந்தச் சிறிய அளவிலான மசாலாப்பொருள் செடிகளை வளர்ப்பவர்களுக்கு விளக்கத் திட்டமிட்டுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஏற்றுமதி நோக்கத்துடன் மசாலாச் செடிகளை வளர்க்கும் ஒருவர் பயன்படுத்தக்கூடிய போக்குவரத்து வழிமுறைகள் இரண்டினை (02) **அடையாளங் காண்க.** (02 புள்ளிகள்)

(b) தனது உற்பத்திகளை ஐரோப்பிய சந்தைக்கு ஏற்றுமதி செய்யும் விருப்பத்துடன் மசாலாப் பொருள்களைத் தயாரிக்கும் ஒருவருக்கு இலத்திரனியல் வர்த்தகத்தால் (E – Trade) கிடைக்கக்கூடிய நான்கு (04) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(c) வெளிநாடுகளுக்கு மசாலாப் பொருள்களை ஏற்றுமதி செய்யும்போது பயன்படுத்தப்படும் இரண்டு (02) முதன்மை ஆவணங்களை (primary documents) **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 05

**சமன்** என்பவர் தொழில்முறை ரீதியில் ஒரு பொறியியலாளராக இருப்பதுடன் மரக்கறிகளை சேதனமுறையில் பயிரிடுவதிலும் ஈடுபட்டுள்ளார். அவர் தனது சேதன மரக்கறி வியாபாரத்தை 5 ஆண்டு களுக்கு முன்னர் ஒரு தனியுடமை வியாபாரமாக ஆரம்பித்திருந்ததுடன் தற்போது வியாபாரமானது சிறிய மற்றும் நடுத்தர அளவு தொழில்முயற்சி நிறுவனமான (SME) வரையறுக்கப்பட்ட தனியார் கம்பனியாக மாற்றம் கண்டுள்ளது. **சமன்** தனது வியாபாரத்திற்கு அதிக மூலதனத்தைத் திரட்டுவதற்காக கம்பனியை கொழும்பு பங்குப் பரிவர்த்தனை நிலையத்தில் பட்டியலிடத் திட்டமிட்டுள்ளார். **சமன்** அண்மையில் இலங்கையின் மிகச் சிறந்த தொழில்முயற்சியாளருக்கான விருதொன்றை வென்றுள்ளார்.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) ஒரு தொழில் முயற்சியாளருக்கும் (entrepreneur) ஒரு தொழிலதிபருக்கும் (business person) இடையிலான மூன்று (03) வேறுபாடுகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(b) **சமனின்** வியாபாரச் செயற்பாட்டை SME ஒன்றாக உயர்த்தக்கூடிய இரண்டு (02) வழிமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(c) நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு மூலதனச் சந்தையின் முக்கியத்துவத்திற்கான மூன்று (03) காரணங்களைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

*பகுதி B முடிவு*

## பகுதி C

(மொத்தம் 20 புள்ளிகள்)

## வினா 06

**ஹப்பி சுப்பர்** என்பது நாடு பூராகவும் 300 இற்கும் மேற்பட்ட விற்பனை நிலையங்களுடன் இலங்கையில் செயற்படும் ஒரு சிறப்பங்காடிச் சங்கிலி (supermarket chain) ஆகும். விரைவாக விற்பனையாகின்ற பல்வேறு வர்த்தக நாமங்களைக் (brands) கொண்ட நுகர்வுப் பொருட்களை (FMCG) விற்பனை செய்வதற்கு அப்பால். **ஹப்பி சுப்பர்** நிறுவனமானது **ஹப்பி சுப்பர்** என்ற தனது சொந்த வர்த்தக நாமத்தின் கீழான பொருள்களையும் விற்பனை செய்கிறது. காய்கறிச் செய்கையாளர்களும் பால் பொருள் தயாரிப்பாளர்களும் தங்களுடைய புதிய காய்கறிகளையும் பால் பொருள்களையும் அருகிலுள்ள **ஹப்பி சுப்பர்** விற்பனை நிலையங்களுக்கு விற்பனை செய்வதை இலகுபடுத்தும் நோக்கில் இந்தச் சிறப்பங்காடிச் சங்கிலியினால் அண்மையில் வலையமைப்பொன்று அறிமுகப்படுத்தப்பட்டது.

பால்ப் பொருள் தயாரிப்பாளர்கள் மற்றும் காய்கறிச் செய்கையாளர்கள் ஆகியோருக்கான வலையமைப்பை உருவாக்குகின்ற **ஹப்பி சுப்பரின்** இச்செயற்றிட்டம் ஆரம்பத்தில் மொணராகலை மாவட்டத்தில் தொடங்கப்பட்டது. இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கம், போக்குவரத்தின்போது பொருட்களுக்கு ஏற்படக்கூடிய வீண்விரயங்களைக் குறைத்தல் மற்றும் இடைத்தரகர்களால் ஈட்டப்படுகின்ற தரகுப்பணத்தை இல்லாமற் செய்தல் ஆகியவற்றின் ஊடாக சிறிய அளவிலான காய்கறிச் செய்கையாளர் களினதும் பால் பொருள் உற்பத்தியாளர்களினதும் வருமானத்தை உயர்த்துவதை உறுதிப்படுத்துவதாகும். **ஹப்பி சுப்பர்** ஆனது காய்கறிச் செய்கையாளர்களிடமிருந்தும் பால்ப் பொருட்கள் தயாரிப்பாளர் களிடமிருந்தும் அவர்களுடைய உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அவர்களுடைய இடத்திற்கே சென்று வாங்குவதற்கான வாகன அணி ஒன்றை ஏற்பாடு செய்திருக்கிறது. இந்த ஏற்பாடானது சிறிய அளவிலான காய்கறிச் செய்கையாளர்களும் பால்ப் பொருள் தயாரிப்பாளர்களும் உயர் வருமானத்தை ஈட்டுவதை உறுதி செய்கிறது. இந்தச் செயற்றிட்டத்தின் தொடக்க வெற்றியானது நுவரெலியா, கண்டி மற்றும் மாத்தளை உள்ளிட்ட ஏனைய மாவட்டங்களுக்கும் அதனை விரிவாக்குவதற்கான சமிக்ஞையை **ஹப்பி சுப்பரின்** முகாமைக்கு வழங்கியிருந்தது. தற்போது, **ஹப்பி சுப்பர்** ஆனது நாடு பூராகவும் 800 சிறிய அளவிலான காய்கறிச் செய்கையாளர்கள் மற்றும் பால் பொருள் தயாரிப்பாளர்களைக் கொண்ட வலையமைப்பொன்றைக் கொண்டிருக்கிறது.

**ஹப்பி சுப்பரின்** முகாமையானது, கம்பனியின் ஒரு நிறுவன சமூகப் பொறுப்புடமை (CSR) செயற்றிட்டமாக மொணராகலையில் உள்ள சேதனமுறை காய்கறிச் செய்கையாளர்களுக்கு இலவசமாக சேதனப் பசளையை (சேதன உரம்) வழங்குவது குறித்து தற்போது கவனம் செலுத்துகிறது. இந்த CSR செயற்றிட்டத்திற்கான சேதனப் பசளையைத் தயாரிப்பதற்கு தமது விற்பனை நிலையங்களில் இருந்து கிடைக்கும் சேதனக் கழிவுகளைப் பயன்படுத்த **ஹப்பி சுப்பர்** திட்டமிடுகிறது. அதன் காய்கறிச் செய்கையாளர்களுக்கு சேதனப் பசளையை வழங்குவதற்கு அப்பால், **ஹப்பி சுப்பர்** ஆனது பேராதனைப் பல்கலைக்கழக விவசாய துறையுடனான கைத்தொழில் ஒன்றிணைவு ஊடாக அந்த காய்கறிச் செய்கையாளர்களுக்குத் தேவையான தொழில்நுட்ப அறிவை வழங்குவதற்கும் எதிர்பார்க்கிறது.

**நீங்கள் செய்ய வேண்டியவை :**

(a) இலங்கை அரசாங்கத்தின் பொருளாதார நோக்கங்களை அடைந்து கொள்வதில் **ஹப்பி சுப்பரின்** பங்களிப்பை **விபரிக்குக.** (05 புள்ளிகள்)

(b) PESTEL பகுப்பாய்வைப் பயன்படுத்தி **ஹப்பி சுப்பரின்** வணிகச் சூழலை **மதிப்பிடுக.** (06 புள்ளிகள்)

(c) மேலே குறிப்பிடப்பட்ட CSR செயற்றிட்டத்தைத் தொடங்குவதன் மூலம் **ஹப்பி சுப்பருக்கு** கிடைக்கக்கூடிய மூன்று (03) நன்மைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(d) **ஹப்பி சுப்பர்** சுற்றாடல்சார் நிலைபேற்றுத் தன்மையை நோக்கிய அதனது வணிக ரீதியான கவனக் குவிப்பை வழிப்படுத்தக்கூடிய இரண்டு (02) வழிமுறைகளை **விபரிக்குக.** (04 புள்ளிகள்)

(e) தொழில் முயற்சியாளர் ஒருவருக்குத் தேவைப்படும் இரண்டு (02) தொழில் முயற்சியாண்மைத் திறன்களைக் (Entrepreneurship skills) **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 20 புள்ளிகள்)

பகுதி C முடிவு

# செயல் வினைச்சொல் செவ்வை நிரல்

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **அறிவு (1)** | விடயங்களையும் அடிப்படை எண்ணக் கருக்களையும் ஞாபகப்படுத்தல் | **வரைக (Draw)** | வரைபடம் அல்லது வரிப்படமொன்றைச் சமர்ப்பித்தல் |
| | | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்கரீதியாக அல்லது காரணரீதியாக தொடர்புகளைத் தாபித்தல் |
| | | **கூறுக/ குறிப்பிடுக(State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக விபரங்களை வெளிப்படுத்தல் |
| | | **அடையாளங்காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் ஏற்பிசைவு செய்தல், தாபித்தல் அல்லது தெரிவுசெய்தல் |
| | | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றன்கீழ் ஒன்றாக எழுதுதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **முற்றடக்கம் (2)** | யோசனைகள் மற்றும் தகவல்களை விபரித்தலும் தெளிவுபடுத்தலும் | **ஏற்பிசைவு செய்க (Recognize)** | அறிவு அல்லது சூழ்நிலை அனுபவத்தைப் பயன்படுத்தி செல்லுபடித்தன்மையை அல்லது அதன் இயலாமையைக் காட்டுதல் |
| | | **பொருள் விளக்குக / கருத்துக்கூறுக(Interpret)** | விளங்கக்கூடிய அல்லது பரிச்சயமான பதங்களில் தெளிவுபடுத்தல் |
| | | **விளக்குக (Describe)** | பிரதான அம்சங்களை எழுதுதலும் தொடர்பாடுதலும் |
| | | **விபரிக்குக (Explain)** | உரிய விடயங்களைப் பயன்படுத்தி தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | | **பொருள் வரையறை செய்க / வரைவிலக்கணப்படுத்துக(Define)** | சரியான தன்மை, நோக்கு அல்லது பொருளைத் தருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பிரயோகம் (3)** | புதிய சூழ்நிலைகளில் அறிவைப் பயன்படுத்தலும் பின்பற்றலும் | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க(Reconcile)** | வேறொன்றுடன் ஒத்திருப்பதை / பொருந்தியிருப்பதை ஒப்புவித்தல் |
| | | **வரைக (Graph)** | வரைபுகள் மூலம் குறித்துக்காட்டுதல் |
| | | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடுகள் அல்லது விளக்கங்கள் ஊடாக தீர்வைக் கண்டுபிடித்தல் |
| | | **தயாரிக்குக (Prepare)** | குறித்த நோக்கத்திற்காக உரிய முறையில் தயார்படுத்தல் |
| | | **எடுத்துக்காட்டுடன் விவரிக்குக (Demonstrate)** | உதாரணங்களுடன் நிறுவுதல் அல்லது வெளிக்காட்டல் |
| | | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate)** | கணிதரீதியான கணிப்பீட்டுடன் கண்டறிதல் அல்லது கணித்தல் |
| | | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டுவருதல் |

| ஆற்றல் மட்டம் | விபரம் | செயல் வினைச்சொல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|---|
| **பகுப்பாய்வு (4)** | யோசனைகளுக் கிடையிலான தொடர்புகளை எழுதுதலும் பிரசினங்களைத் தீர்த்தலும் | **தொடர்பாடுக(Communicate)** | தகவல்களைப் பகிர்தல் அல்லது பரிமாறுதல் |
| | | **சுருக்கமாகக குறிப்பிடுக(Outline)** | முக்கிய அம்சங்களின் தொகுப்பினைத் தருதல் |
| | | **வேறுபடுத்துக (Contrast)** | வேறுபாடுகளைக் காட்டுவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிவதற்காக ஆய்வுசெய்தல் |
| | | **கலந்தாய்வு செய்க / ஆராய்க (Discuss)** | விவாதிப்புகள் மூலம் விபரமாக ஆய்வுசெய்தல் |
| | | **வித்தியாசப்படுத்துக / வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்துகின்ற வித்தியாசங்களைக் காட்டுதல் |
| | | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது பேறினை கண்டுபிடிப்பதற்காக விபரமாக ஆய்வுசெய்தல் |